DFCC BANK
Keep Growing

# வெஸ்டர்ன் யூனியன் கொடுப்பனவுகள்

## முக்கிய தகவல்கள் ஆவணம்

## DFCC வங்கியின் வெஸ்டர்ன் யூனியன் கொடுப்பனவுகள் பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டியவை

வெளிநாட்டிலிருந்து உங்களுக்கு அனுப்பப்படும் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு வழி பற்றி இன்னமும் சிந்திக்கின்றீர்களா? வெஸ்டர்ன் யூனியன் மூலம் அவ்வாறு அனுப்பப்படும் பணத்தைப் பெற்றுக்கொள்ளும் வசதியை DFCC வங்கி வழங்குகின்றது. உங்கள் வசதிக்கேற்ப DFCC வங்கிக்கு வருகை தந்து இச் சேவையைப் பெற்றுக்கொள்ள உதவும் வகையில் இச் சேவையின் சிறப்பம்சங்களை நாம் உங்களுக்கு இத்தால் அறியத்தருகின்றோம்.

உள்ளடக்கம


| இல. | | பக்க இல. |
|---|---|---|
| 1. | வெஸ்டர்ன் யூனியன் கொடுப்பனவு | 3 |
| 2. | வெஸ்டர்ன் யூனியன் கொடுப்பனவுகள் தொடர்பில் DFCC வங்கி உங்களுக்கு எவ்வாறு உதவும்? | 3 |
| 3. | வெஸ்டர்ன் யூனியனிலிருந்து பணத்தைச் சேகரிக்க நீங்கள் கொண்டுவர வேண்டியவை எவை? | 3 |
| 4. | அனுப்பியவர் பற்றிய எத்தகைய விபரங்களை நீங்கள் அறிந்திருக்க வேண்டும்? | 3 |
| 5. | பணத்தை/வசதியை பெற/பயன்படுத்த DFCC கணக்கொன்றை வைத்திருப்பது அவசியமா? | 3 |
| 6. | வெஸ்டர்ன் யூனியன் மூலம் பணத்தைப் பெறுவதற்கு எவ்வளவு செலவாகும் | 4 |
| 7. | கொடுப்பனவைச் செய்யும்போது கவனிக்க வேண்டிய முக்கிய காரணிகள் எவை? | 4 |
| 8. | வேறு எவராவது வெஸ்டர்ன் யூனியன் பணத்தை வங்கியிலிருந்து சேகரிக்க முடியுமா? | 4 |
| 9. | வெஸ்டர்ன் யூனியன் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கான கால அவகாசம் என்ன? | 4 |
| 10. | எம்முடன் தொடர்புகொள்ளுதல் | 4 |

## 1. வெஸ்டர்ன் யூனியன் கொடுப்பனவு

வெஸ்டர்ன் யூனியன் கொடுப்பனவு என்பது வெஸ்டர்ன் யூனியன் மூலம் பணத்தைப் பரிமாற்றம் செய்யும் வழிமுறையாகும். இது பணப் பரிமாற்றத்திற்குப் பரவலாகப் பயன்படுத்தப்படும் மிகவும் பாதுகாப்பான விருப்பத்தேர்வாகும். உலகின் எந்த இடத்திலிருந்தும் அனுப்பப்படும் பணத்தை ஒருசில நிமிடங்களில் பெற்றுக்கொள்ள இது உங்களுக்கு உதவும்.

பணத்தைப் பெற்றுக்கொள்ள இது இலகுவான மற்றும் வசதியான வழியாகும்.

## 2. வெஸ்டர்ன் யூனியன் கொடுப்பனவுகள் தொடர்பில் DFCC வங்கி உங்களுக்கு எவ்வாறு உதவும்?

உங்களுக்கு வசதியான எந்தவொரு DFCC வங்கிக் கிளைக்கும் விஜயம் செய்து, வெஸ்டர்ன் யூனியன் மூலம் அனுப்படும் பணத்தை இலகுவாகப் பெற்றுக்கொள்ள DFCC வங்கி உங்களுக்கு உதவும்.

## 3.வெஸ்டர்ன் யூனியனிலிருந்து பணத்தைச் சேகரிக்க நீங்கள் கொண்டுவர வேண்டியவை எவை?

- தேசிய அடையாள அட்டை/சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது கடவுச்சீட்டு
- பணப் பரிமாற்றக் கட்டுப்பாட்டு இலக்கம் (MTCN)
- அனுப்பியவரின் விபரங்கள்

## 4. அனுப்பியவர் பற்றிய எத்தகைய விபரங்களை நீங்கள் அறிந்திருக்க வேண்டும்?

- அனுப்பியவரின் முழுப் பெயர்
- பணம் எந்த நாட்டிலிருந்து அனுப்பப்படுகிறதோ அந்த நாட்டின் பெயர்
- பரிமாற்றம் செய்யப்படும் தொகை

## 5. பணத்தை/வசதியை பெற/பயன்படுத்த DFCC கணக்கொன்றை வைத்திருப்பது அவசியமா?

இல்லை

## 6. வெஸ்டர்ன் யூனியன் மூலம் பணத்தைப் பெறுவதற்கு எவ்வளவு செலவாகும்?

நாம் கட்டணம் அறவிடுவதில்லை. இச் சேவையை இலவசமாகவே வழங்குகின்றோம்.

## 7. கொடுப்பனவைச் செய்யும்போது கவனிக்க வேண்டிய முக்கிய காரணிகள் எவை?

- அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஒரு செல்லுபடியாகும் ஆவணத்தின் (தே.அ.அ., கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரம்) மூலம் உங்கள் ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும்.
- அனுப்பியவரின் சரியான விபரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- பரிமாற்றத்தைச் செயற்படுத்துவதற்குச் சரியான MTCN இலக்கம் (பணப் பரிமாற்றக் கட்டுப்பாட்டு இலக்கம்) கட்டாயமானதாகும்

## 8. வேறு எவராவது வெஸ்டர்ன் யூனியன் பணத்தை வங்கியிலிருந்து சேகரிக்க முடியுமா?

மூன்றாம் தரப்பினர் பணத்தைச் சேகரித்துச் செல்ல வங்கி அனுமதிக்காது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொண்கின்றோம்.

## 9. வெஸ்டர்ன் யூனியன் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கான கால அவகாசம் என்ன?

வெஸ்டர்ன் யூனியன் மூலமான உங்கள் பணத்தைச் சேகரிப்பதற்கு, திங்கள் முதல் வெள்ளி வரை மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்கும் இடையே வியாபார நேரங்களில் நீங்கள் எமது எந்தவொரு கிளைக்கும் விஜயம் செய்யலாம்.

## 8. எம்முடன் தொடர்புகொள்ளுதல்

+94(11)2350000 என்ற எமது 24 மணிநேர தொடர்பு நிலைய தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது info@dfccbank.com என்ற மின்னஞ்சல் மூலம் நீங்கள் எம்முடன் தொடர்புகொள்ளலாம். அத்தோடு எமது வலைத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு கிளைக்கு விஜயம் செய்வதன் மூலமும் நீங்கள் எம்முடன் தொடர்புகொள்ள முடியும்.